பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை 10.12.2023 கதிர் 394

# சைவ மக்கள் வேதனையில் உள்ளனர் முதலில் நம்பிக்கையை ஏற்படுத்துங்கள்

## இமயமலைப் பிரகடனக்காரர்களிடம் ஆறுதிருமுருகன் வலியுறுத்து



சைவ மக்கள் அனைவரும் வேதனையில் உள்ளார்கள் அவர்களது வேதனையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து முதலில் நம்பிக்கையை ஏற்படுத்தப் பாருங்கள் என்று சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தினர்மற்றும்உலகத் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு என்று அறிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனால், முதலில் வரப்போவது ஜனாதிபதித் தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா என்பதில் இன்னும் தெளிவில்லை.

2024 வரவு செலவுத் திட்டத்தை நவம்பர் 13 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது, தேர்தல்களின் வரிசையை ஜனாதிபதி குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும், ஐக்கியதேசியக்கட்சியின்தலைவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற சந்திப்பின் போது பொதுத் தேர்தலுக்கு முன்னுரிமை அளிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்என்றுசமீபத்திய ☞ 2

# நாடாளுமன்றம் இன்றும் கூடும்

பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டுவிவாதத்தைநடத்தும்நோக்கில் இன்றையதினம் நாடாளுமன்றம் கூடவுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இதனை அறிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை இந்த விவாதம் நடைபெறவுள்ளது. கடந்த நவம்பர் 20 சபாநாயகர் ☞ 2

# மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் குறித்த வர்த்தமானி உடன் திருத்தப்படும்

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் ஒருசில குறைபாடுகள் உள்ளதை ஏற்றுக் கொள்கிறேன். திருத்தங்களுடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும். சட்டமூலம் முதல் வாசிப்புக்காக டிசெம்பர் 12 அல்லது 13 அன்று சபையில் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்திருப்பதாவது:

மின்சார சபை மறுசீரமைப்புதொடர்பான சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் கருத்துக்கள் அடிப்படையற்றவை. மின்சாரசபையைமறுசீரமைப்பது தொடர்பில் கடந்த 14 மாத காலமாக நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் மறுசீரமைப்புதொடர்பான பரிந்துரைகளை முன்வைக்க துறைசார் நிபுணர்களை உள்ளடக்கியகுழுநியமிக்கப்பட்டது.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில்பாராளுமன்றஉறுப்பினர்களிடம்ஆலோசனை பெறுவதற்கு 225 உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தேன்.

12 பேர் மாத்திரமே கலந்துக்கொண்டார்கள். முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர்களாக பதவி வகித்த கரு ஜயசூரிய,ரவி கருணா நாயக்க,அஜித் பெரேரா ஆகியோர் தமது ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்கள்.

மின்சாரத்துறையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மின்சார சபையுடன் தொடர்புடைய34தொழிற் சங்கங்களுடன் நான்கு தடவைகள் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டேன். வேண்டுமாயின் அதன் காணொளியை வழங்க முடியும்.

அதேபோல்மின்சார சபையின்114 உயர்மட்ட அதிகாரிகளு ☞ 8

# அரசியலுக்கு அப்பாற்று கிரிக்கெட்டை பேணுவதே ஜனாதிபதியின் நோக்கம்

## அவரே சொன்னார் இதனை

இலங்கையின் கிரிக்கெட்விளையாட்டை அரசியலுக்குஅப்பாற்பட்டு பேணுவதே தமது நோக்கம்என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2030ஆம் ஆண்டு இலங்கையின் கிரிக்கட் எங்கு இருக்கவேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வை தமக்கு இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அதனால் தான் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபாவை பாடசாலைகிரிக்கெட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கியதாகவும், எதிர்காலத்தில் அதனை வருடாந்தம் 2 பில்லியன் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கொழும்பு கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில்உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்துவைத்தஜனாதிபதி, பின்னர் விளையாட்டு சங்கஉறுப்பினர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். 1996உலகக் கிண்ணத்தை வென்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் 20/20 உலகக் கிண்ணத்தை 2014இல் வென்ற அணிக்கும் கோல்ட்ஸ்விளையாட்டுக் கழகத்தின் ☞ 8

# கலைஞர்களின் நிபுணத்துவத்தைக் காக்க புதிய அரச நிறுவனம் உருவாக்க முயற்சி

## நீதி அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல்

கலை மற்றும் கலைஞர்களின் நிபுணத்துவத்தை பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் அதிகாரம்கொண்டபுதிய அரசநிறுவனமொன்றை உருவாக்குவது தொடர்பானஆரம்பகட்டக் கலந்துரையாடல் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

நீதி,சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கலை சங்கங்களைப்பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு கலைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

சினிமா, தொலைக் காட்சி நாடகம், இசை, வீதி நாடகம், சித்திரம், கவிதை, எழுச்சிக் கவிதை உள்ளிட்ட சகல கலைத்துறைகளையும் உள்ளடக்கும்வகையில் அதிகாரம்கொண்டபுதிய சட்டத்தின் ஊடாக இந்த அரச நிறுவனம் ☞ 9

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாட்சம்பள முறை மாறவேண்டும்

## தொழிலாளர் காங்கிரஸ் அதற்கே பாடுபடுகிறது என்கிறார் பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாட் சம்பள முறைமை மாற்றப்படவேண்டும். அவர்களுக்கு நியாயமான வருமானம் இலாபம்கிடைக்ககூடியவகையில் புதிய பொறிமுறை உருவாக்கப் படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்-என்றுஇலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும்,நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் வெள்ளிக்கிழமைமாலை செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில்அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாம் உட்பட கூட்டுஒப்பந்தத்தில்கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில்பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ☞ 8

# ஷானி அபேயசேகரவை பாதுகாக்க முழு நடவடிக்கை எடுப்பது அவசியம்

## சபையில் சஜித் வலியுறுத்து

ஷானி அபேசேகரவை கொலைசெய்ய சதித்திட்டம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்துக்கு தெரிவித்திருக்கும் கருத்து பாரதூரமானது.அதனால் அவருக்கு முறையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சனிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது: ☞ 9

# புத்தளம் அருகே கடலில் இருந்து 4 கி. தங்கம் கடற்படையால் மீட்பு

புத்தளம் கடலருகே உப்பேரியில் இருந்து 4 கிலோவுக்கும் அதிகமான தங்கம் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

பத்தனங்குண்டுவ தீவுக்கு அருகில் கடற்படையினர்வெள்ளிக்கிழமை நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில் இந்தத் தங்கம் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்களால் இந்தத் தங்கம் வேண்டுமென்றே நீருக்கடியில் பதுக்கப்பட்டதாகக் கடற்படை சந்தேகிக்கின்றது. இந்தத் தேடுதல் நடவடிக்கையில் 2 சந்தேகநபர்களும்கைது செய்யப்பட்டுள்ளனர். ஒ-ருபடகும்கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படை அறிவித்துள்ளது.

இந்த ☞ 9

# வெளிப்படைத்தன்மை, நல்லாட்சியை ஊக்குவிக்க நாடாளுமன்றத்தினுள் சாதக நகர்வுகளும் உண்டாம்

வெளிப்படைத் தன்மைமற்றும்நல்லாட்சியை ஊக்குவிப்பதற்கு நாடாளுமன்றத்திற்குள் துறைசார்மேற்பார்வைக் குழுக்கள் மற்றும் வரவுசெலவுத்திட்டஅலுவலகத்தைஉருவாக்குதல் உள்ளிட்ட சாதகமான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் தெரிவித்தார்.

'நாடாளுமன்ற உறுப்பினர்கள்மத்தியில் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சியை ஊக்குவித்தல்' என்ற தொனிப்பொருளில் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கானஆசியபசுபிக் பிராந்தியநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சர்வதேசமாநாடு கடந்த டிசம்பர் 06ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

இலங்கைப் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைச் சந்தித்தால், அது சவாலான சூழ்நிலைக்கு வழிவகுக்கும். மறுபுறம், ஒரு பொதுத் தேர்தலைத் தெரிவு செய்வதன் மூலம், ஒரு சில ஐதேக பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்குள் நுழைய அனுமதிக்கலாம், அரசியல் சூழ்ச்சிக்காக அவர்களின் தற்போதைய ஜனாதிபதி பதவியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஜனாதிபதி, தற்போதைய நிலவரப்படி, உறுதியான பதிலை வழங்கவில்லை, ஆனால் விவாதத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை ஒப்புக்கொண்டார்.

ஜனாதிபதி கடந்த வாரம் துபாய்க்கு கிளம்பிச் செல்வதற்கு முன்னதாக தனது நெருங்கிய சகாக்கள் சிலரிடம் இது பற்றிக் கலந்துரையாடியுள்ளார். அந்த சகாக்கள் முன்னர் அரசியலில் ஈடுபட்டபோதும் இப்போது ரணிலிடமிருந்து தூர விலகியே நிற்பவர்கள். இந்த தனிப்பட்ட சந்திப்பில் நாட்டின் தற்போதைய நிலைமை, பொருளாதார நெருக்கடி, தேர்தலை நடத்துவது தொடர்பான ஐ.தே.க தலைவர்களின் நிலைப்பாடு, ஜனாதிபதித் தேர்தல், அரசாங்கத்திற்கும் ஐ.தே.க.வுக்கும் மக்கள் அளித்த பதில்கள் போன்றனவும் இடம்பெற்றுள்ளதாகவும் அறியமுடிந்தது. நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஜனாதிபதியைச் சுற்றியிருந்தவர்கள் முதலில் அறிவித்த போதிலும், அதில் உள்ள அபாயங்கள் தொடர்பில் இந்தத் தனிப்பட்ட சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் இம்முறை எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்றும், அப்படியானால், யார் ஆட்சி அமைத்தாலும், ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம், குறைந்தபட்சம் சில நாட்களுக்கு ஜனாதிபதி பதவியில் இருக்க அனுமதிக்காது என்றும் கூறப்பட்டுள்ளது. . எனவே, பொதுத் தேர்தலை முதலில் நடத்துவது புத்திசாலித்தனமான செயல் அல்ல என ஜனாதிபதி கருதுவதாக தெரியவந்துள்ளது. இதன்படி பொதுத் தேர்தலை முன்னதாகவே நடத்த வேண்டும் என ஐ.தே.கட்சியின் தலைவர்களும், ஜனாதிபதியைச் சூழவுள்ள மக்களும் தெரிவித்த போதிலும், அது நடைபெறாத நிலையை எட்டியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

எவ்வாறாயினும், இந்தக் கலந்துரையாடலின் தகவல் கடந்த வாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதியைச் சுற்றியிருந்தவர்களின் காதுகளுக்கும் சென்றடைந்தது. அதே சமயம் அவர்களும் தற்போது மிகுந்த கவலையில் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்குக் காரணம், முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால், அதன் மூலம் இரண்டு பெரிய அரசியல் அபாயங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முதலாவது, ஜனாதிபதித் தேர்தலில் தோற்றால் தமது அரசியல் வாழ்க்கை உடனடியாக முடிவுக்கு வந்துவிடும் என்பதை இவர்கள் உணர்ந்துள்ளனர்.

இரண்டாவது ஆபத்து என்னவென்றால், முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாவிட்டால் இந்தக் குழு அரசியல் அனாதைகளாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி போட்டியிட மாட்டார் என்ற கருத்து தற்போது பேசப்பட்டு வருகின்றமையே இதற்குக் காரணம். ஒருமுறை முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவும் ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார் என பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதன்படி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி போட்டியிடாவிட்டால் என்ன செய்வது?

உருவாகிவரும் இந்த அபாய நிலை குறித்து ஆளும் தரப்புக்குள் புதிய விவாதம் ஒன்று உருவாகியுள்ளதாக அறிய முடிகின்றது. அதற்கான முயற்சியை முன்னெடுத்தவர் வேறு யாருமல்லர். முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க. முன்னதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மைத்திரிபால, அவர் மீண்டும் தீவிர அரசியலுக்கு வருவதற்கு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களைத் தொடங்க அனுமதிக்கவில்லை. சந்திரிகாவுக்கு விசுவாசமாக இருந்த அனைவரையும் ஒதுக்கி வைத்துவிட்டு மைத்திரிபால தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்ற நிலையில், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போரிலிருந்து சந்திரிகா பின்வாங்கினார். ஆனால் தற்போது டொரிங்டன் மாவத்தையில் உள்ள சந்திரிகாவின் வீடு அரசியல் பிரதிநிதிகள் அதிகம் கூடும் இடமாக மாறியுள்ளதை காணமுடிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களான நிமல் சிறிபால, மகிந்த அமரவீர மட்டுமன்றி, ஜனாதிபதியின் நட்புறவாகக் கருதப்படும் நிமல் லான்சா, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் அடிக்கடி அரசியல் கலந்துரையாடல்கள் இடம்பெறும் இடமாக இது மாறியுள்ளதாகவும் கூறப்படுகிறது. சந்திரிகா வீட்டில் விவாத மேசையில் உட்காருங்கள். எதிர்க்கட்சியில் சுயேச்சையாக அமர்ந்திருக்கும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் பல தடவைகள் இந்த கலந்துரையாடல்களில் கலந்துகொண்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சைவ மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பேரவையினரிடம் வலியுறுத்தினார் இந்து மா மன்ற உப தலைவர் ஆறு திருமுருகன்.

'இமயமலைப் பிரகடனம்' என்ற ஒன்றை வெள்ளிக்கிழமை கண்டியில் வெளியிட்ட சங்க மன்றத்தினரும் உலகத் தமிழர் பேரவையினரும் அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்த பின்னர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். நல்லூர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட அவர்கள் பின்னர் நல்லூர் ஆதீனத்தில் அதன் குருமுதல்வர் மற்றும் ஆறு திருமுருகனைச் சந்தித்துப் பேசினர்.

அங்கு உரையாற்றிய ஆறுதிருமுருகன் தெரிவித்ததாவது:

உங்களை யார் என்று எங்களுக்குத் தெரியாது. கடந்த பத்து வருடங்களாக நல்லை ஆதீனத்திற்கு பலர் வருகின்றார்கள். பௌத்தபீடத்தவர்கள் வந்துள்ளார்கள் ஜனாதிபதி வந்திருக்கின்றார். வெளிநாட்டிலுள்ள சங்கங்கள், அமைப்புக்கள் வந்திருக்கின்றன. ஆனால் எமக்கு எந்தத் தீர்வும் கிடைப்பதில்லை. எங்களுக்கு ஏதாவது தீர்வு கிடைக்க முயற்சி செய்யுங்கள்.

பல இந்து ஆலயங்களை அவமரியாதைப்படுத்தியுள்ளார்கள். பல மடங்கள், சமாதிகள் இருந்த இடங்கள் எல்லாம் இடித்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றை புனரமைக்கவேண்டும். திருக்கோணேஸ்வரத்திற்கு அருகாமையில் அசைவகடை அமைக்கப்பட்டுள்ளது. ஆதனை அகற்றவேண்டும் என பலரிடமும் கோரிக்கைகளை முன்வைத்தோம். எந்த நடவடிக்கையும் இல்லை. இன்று அதனை நிரந்தரமாகக் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

அது மட்டுமன்றி திருக்கோணேஸ்வரத்தில் பல திருப்பணிகள் செய்யவேண்டியுள்ளது அதனைத் தடுப்பதிலே தான் அங்குள்ள பௌத்த மத குருவும் தொல்லியியல் திணைக்களமும் அக்கறையாக உள்ளனர். வடக்கு கிழக்கில் பௌத்தர்களே இல்லாத இடத்தில் விகாரைகளைக் கட்டி வருகின்றார்கள். காங்கேசன் துறையில் சித்தர்களின் சமாதி, பாரம்பரியமான சிவன்கோவில் போன்றவற்றை இடித்து இராணுவத்தினர் விடுதி அமைத்து செயற்பட்டு வருகின்றார்கள்

ஆட்சியிலிருந்த மூன்று ஜனாதிபதிகளிடம் இவற்றை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுத்தோம். ஆனால் இதனை உடனே செய்கின்றோம் எனக் கூறினார்கள். ஆனால் இதுவரை எந்த முயற்சியும் இல்லை. இதன் காரணமாக எமக்கு யாரிடமும் நம்பிக்கை இல்லை நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவை பற்றிக் கதைத்தும் உள்ளார்கள். ஆதற்கும் பயன் இல்லை. நீங்கள் குறித்த விடயங்களில் எதையாவது ஒன்றினைச் செய்து எங்களுக்கு நம்பிக்கையைத் தாருங்கள் - என்றார்.

அங்கு உரையாற்றிய நல்லை ஆதீனக் குருமுதல்வர் தெரிவித்ததாவது:

தமிழர்கள் சண்டைக்காரர்கள் அல்ல அனைத்து மதங்களுடனும் இனங்களுடனும் நல்லிணக்கத்துடன் வாழவே விரும்புகின்றார்கள் என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பிரமச்சார்யக் குருக்கள் உலகத்தமிழர் பேரவை மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் ஆகிய பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார்.

உலகத்தமிழர் பேரவை மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் ஆகிய பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர்களாகிய நாங்கள் சண்டைக்காரர்கள் அல்லர். அனைத்து மதங்களுடனும் மக்களுடனும் ஒற்றுமையாக நல்லிணக்கத்துடன் வாழவே விரும்புகின்றோம். சில பௌத்த மத குருமார்கள் எமது இடங்களை ஆக்கிரமித்து தமது மதத்தைத் திணிப்பதினால் இங்கு பல பிரச்சினைகள் உருவாகின்றன. இந்தப் பிரச்சினைகள் இந்த ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் எம்மை சந்திக்க வருபவர்களுக்கு எடுத்துரைக்கின்றோம். ஆனால் எதுவும் தீர்க்கப்பட்டதாக இல்லை - என்றார்.

குழுவினர் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேர்னாட் ஞானப்பிரகாசத்தையும் சந்தித்துப் பேசினார். அவர்களிடம் ஆயர் தெரிவித்ததாவது:

அடிமட்டத்தில் இருந்து பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்பது வரவேற்கத்தக்க விடயம் இவ்வாறான முயற்சிகள் தொடரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதற்கு ஒத்துழைப்பு மற்றும் நல்லாசிகளை வழங்குகின்றேன். அரசியல்வாதிகள் இல்லாது இவ்வாறான அமைப்புகள், குறிப்பாக புலம்பெயர்ந்தவர்கள் பௌத்த அமைப்புக்கள் இணைந்ததாக அடிமட்டத்தில் இருந்தே பிரச்சினைகளை இனம் கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கு எடுக்கின்ற முயற்சி தொடரவேண்டும் இவ்வாறு பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்துவைப்பதன் ஊடாகவே மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும் என்றார்.

தொடர்ந்து தூதுக்குழுவினர் யாழ். நகரிலுள்ள ரிம்மர் மண்டபத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய உலகத் தமிழர் பேரவைத் தலைவர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்ததாவது:

நாங்கள் மக்களிடம் செல்கின்றோம். மக்கள் மூலமாகவே ஆட்சியாளர்களுக்கு அழுத்தத்தை வழங்கவுள்ளோம். இதுவே எங்கள் திட்டம்.

ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் நாங்கள் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று கூறி ஆட்சிபீடம் ஏறுகின்றார்கள். ஆனால் எவையும் நடத்தது இல்லை. நாங்கள் மக்களிடம் செல்கின்றோம். மக்கள் மூலமாகவே அரசுகளுக்கு அழுத்தத்தை வழங்கவுள்ளோம் அரசியல் கட்சிகளுக்கும் இத்தகைய அழுத்தத்தையே வழங்கவுள்ளோம். முதல் முறையாக இவ்வாறான வேலைத்திட்டத்தை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு சமயத்தவர்களும் ஒவ்வொரு இனத்தவர்களும் சென்று பிரச்சினைகளை அடையாளம் கண்டது கிடையாது. நாம் அனைத்து இடங்களுக்கும் சென்று இத்தகைய விடயங்களைக் கையாள்கின்றோம். எமது முயற்சிகள் உடனடியாக வெற்றிபெறும் என்று கூறவில்லை. எங்கள் முயற்சிகளை நாங்கள் வெளிப்படுத்துகின்றோம். இதனை விமர்சிப்பது கெட்டித்தனமான விடயமாக இருக்காது. எங்களுக்கும் இது முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. எனினும் நாங்கள் முயற்சி செய்யப்போகின்றோம்.

மகாநாயக்கர்களைச் சந்தித்தபோது எங்களைப் போன்றே பௌத்த குருமார்களுக்கும் எதிர்ப்புக்கள் இருக்கின்றது என்பது புரிந்தது. தங்களுக்குள் இருக்கும் சில மதகுருமார்கள் தேசிய வாதம் பிடித்தவர்களாக இருக்கின்றார்கள், அவர்கள் அதனை உரத்துப் பேசுவதாலும் அதற்கு ஊடகங்கள் உறுதுணையாக இருப்பதாலும் அவை வெற்றிபெறுகின்றன, சமாதானத்தை கோரி நிற்பர்கள் அதை எதிர்த்து அதைவிடக் குரல் கொடுக்கவேண்டும் எனவும் கூறியிருந்தார்கள். இதேபோன்றுதான் புலம்பெயர் அமைப்புக்கள் பலவும் விமர்சிக்கின்றன. குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. நாங்கள் அதைப்பற்றிக் கருத்தில் எடுக்கவில்லை. எதிர்காலத்தைப் பற்றி விமர்சித்துப் பயனில்லை.

நாங்கள் மக்களின் பிரச்சினைகளை மக்கள் மயமாக்கிய வருகின்றோம். அதன் மூலம் தீர்வு கிடைக்கிறதா என்பதைப் பார்க்கின்றோம். எங்களைப் பற்றிச் சிலர் பல விதமாகக் கூறிவருகின்றார்கள் நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நாங்கள் சமூக மட்டத்திலுள்ள அனைத்துப் பிரிவினரையும் சந்திக்கின்றோம். போர்க் குற்றவாளியான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்சவைத் தவிர்த்து அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் சமூக மட்ட அமைப்புக்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளோம் என்றார்.

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

அதேநேரம், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தின் இறுதி மூன்று நாள் விவாதம் டிசெம்பர் 11 முதல் 13 வரை இடம்பெறவிருப்பதுடன், 13 பி.ப. 6.00 மணிக்கு 2024ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது என்றார்

## வெளிப்படைத்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்திற்குள் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த சாதகமான செயற்பாடுகள் ஊடாக கொள்கை உருவாக்கத்தை மக்கள் சார்பானதாகவும், நிதி முகாமைத்துவம் உள்ளிட்ட பணிகளை மிகவும் வெளிப்படையாகவும், பொறுப்புணர்வுடனும் நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புக்கிடைக்கும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அமைதிக்கான சர்வதேச மாநாட்டுப் பேரவையின் தலைவர், இலங்கையில் ஆறாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்த மாநாட்டிற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமை தாங்கியதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த மாநாட்டை உலகளாவிய அமைதி ஒன்றியம் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புக்களான அமைதிக்கான சர்வதேச மாநாட்டுப் பேரவை மற்றும் அமைதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியன இலங்கை நாடாளுமன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ஊழலைத் தடுப்பதற்காக கடந்த காலத்தில் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பது இலங்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். பிராந்திய நாடுகளுக்கிடையே ஊழலுக்கு எதிரான வலுவான சட்டங்களில் ஒன்றாக இதனை அறிமுகப்படுத்த முடியும் என இங்கு உரையாற்றிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அமைதிக்கான சர்வதேச மாநாட்டுப் பேரவையின் தலைவர், இலங்கையில் ஆறாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகையில், பல போர் மோதல்கள் உள்ள சர்வதேச சூழ்நிலையில், போர் மனப்பான்மை கொண்ட சில உலக வல்லரசுகள் நோயுற்ற மற்றும் பட்டினியால் வாடும் ஆயிரக்கணக்கான மக்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். உலக அமைதிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். அத்துடன், உலக சமாதானத்திற்காக இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நடுநிலையான அதாவது அணிசேரா வெளிநாட்டுக் கொள்கை முழு உலகிற்கும் தேவை எனவும் முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்த மாநாட்டில் சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர ஆகியோருக்கு உலகளாவிய அமைதி ஒன்றியத்தினால் சமாதானத்திற்கான தூதுவர்' கௌரவ சான்றிதழ் வழங்கப்பட்டன.

இம்மாநாட்டில் நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




# காசாவுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகள் இலங்கைக்கு மனித உரிமைகள் குறித்து கற்பிக்க தேவையில்லை

## அலி சப்ரி இடித்துரைப்பு



பயங்கரவாதத்தடைசட்டம்அநாவசியமாகப் பயன்படுத்தப்படுவதை அங்கீகரிக்க முடியாது. இலங்கையில்தமிழ்மக்கள்கண்ணியத்துடன் வாழ்வதை எமது அரசாங்கம் உறுதி செய்யும்.

எனவே காசாவுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகள் மனித உரிமைகள் தொடர்பில் எமக்கு கற்பிக்கத் தேவையில்லை என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கைக்குள் மனித உரிமைகளை பாதுகாப்பதை நாம் பார்த்துக் கொள்கின்றோம். எம்மை விமர்சிக்கும் நாடுகளில் என்ன மனித உரிமைகள் இருகின்றன? காசாவில் 14 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதனை நிறுத்துமாறு கூறுகின்றார்களா? மாறாக ஜனாதிபதி அங்கு சென்று ஆயுதங் களையும், நிதியையும் வழங்குகின்றார். எனவே இவ்வாறான நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனால் இலங்கையிலுள்ள மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதை நாம் உறுதி செய்ய வேண்டும். பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை நானும் அங்கீகரிக்கவில்லை.

நீதி அமைச்சராக பதவி வகித்த போது, நான் இது தொடர்பான சட்டத் திருத்தமொன்றையும் முன்வைத்திருக்கின்றேன். ஏனைய நாடுகளின் அழுத்தங்களால் நாம் இதனைக் கூறவில்லை. எமது நாட்டிலுள்ள தமிழ் மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதே வேளை பிரிவினைவாத நிலைப் பாடுகளுக்குள் செல்ல வேண்டாம் என்று தற்போதுள்ள இளம் தலைமுறையினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும்தாம்பிரிவினைவாதத்தைவிரும்புபவர்கள் அல்லர் என்று தெரிவித்துள்ளமை வரவேற் கத்தக்கதாகும். ஆனால் இலங்கைக்கு வெளியிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் தமது வாக்கு வங்கிகளுக்காக பிரிவினைவாதத்தை ஆதரிக்கின்றனர்.

இங்கிலாந்தில் ஹமாஸ் தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும்முன்னெடுக்கமுடியாது. ஆனால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை கௌரவிக்கும் வகையில் நினைவேந்தல்கள் இடம்பெறுகின்றன.

இது இரட்டை நிலைப்பாடில்லையா? எனவே தான் இவர்களின் கருத்துக்களை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று குறிப்பிடுகின்றோம். இதன் அரத்தம் மக்கள் பாகுபாடாக நடத்தப்பட வேண்டும் என்பதல்ல. இங்கும்நிச்சயம்மாற்றங்கள்ஏற்படவேண்டும்.

பயங்கரவாதத் தடை சட்டம் மாற்றப்பட வேண்டும். அது அநாவசியமாக பயன்ப டுத்தப்படக் கூடாது. நினைவேந்தல்களை செய்வதில் பிரச்சினையில்லை.

பிரபாகரனை நினைவு கூர்வதற்கு அவரது பெற்றோருக்கு உரிமையுண்டு. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பை பெருமைப்படுத்த அனுமதிக்க முடியாது.

தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை பெருமைப்படுத்துவது நாட்டில் வன்முறையைத் தூண்டும். ஒருமித்த நாட்டுக்குள் அதிகபட்ச அதிகாரப்பகிர்வை அங்கீகரிக்கின்றோம். உரிமைகளுக்காக அமைதியாகப் போராடுவதில் தவறில்லை. - என்றார். (05)

# ஊடகவியலாளர்களுக்கு சம்பளம் மிகக் குறைவு

## அநுரகுமார வேதனை

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மிகவும் குறைந்த மட்டத்திலான சம்பளத்தையே ஊடகவியலாளர்கள் பெறுகிறார்கள்.

ஊடகவியலாளர்களுக்கு எவ்வித மான நலன்புரி திட்டங்களும் தற்போது செயற்படுத்தப்படுவதில்லை. ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்கள் தொடர்பில்கவனம்செலுத்துவதில்லை. தற்போதையவாழ்க்கைசெலவுகளுக்கு அமைய ஊடகவியலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் எனமக்கள்விடுதலைமுன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வெகுஜன ஊடகம் மற்றும் துறைமுகம், கப்பற் றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

பொருளாதாரப்பாதிப்புக்குமத்தியில் ஊடகவியலாளர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.தற்போதைய வாழ்க்கை செலவுக்கு அமைய ஊடக நிறுவனங்கள்ஊடகவியலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில்லை.

தொழிற்றுறையை முன்னெடுப் பதற்கல்ல, தமது தனிப்பட்ட தேவை களைக் கூட நிறைவேற்றிக் கொள் வதற்கு கூட முடியாத அளவுக்கு ஊடகவியலாளர்களின் சம்பளம் குறைந்த மட்டத்தில் உள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு என்று கடந்த காலங்களில் 3 லட்சம் ரூபா கடன் வசதி, மோட்டார் வாகன கொள்வனவுக்கு இலகு கடன், இலகு கடன் திட்டத்தில் வீடு, காப்புறுதித் திட்டம் என பலதரப்பட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆனால் ஏதும் சாத்தியமடைய வில்லை. ஊடகவியலா ளர்கள் இந்தத் திட்டங்களால் பயன டையவில்லை.

ஊடகவியலாளர்கள் மாடி வீடுகளைக் கட்டுவதற்கும், சொத்து சேர்ப்பதற்கும் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரவில்லை.

கௌரவமான முறையில் தமது தொழிற்றுறையை முன்னெடுப்பதற்கு உரிய சம்பளத்தை வழங்குமாறு கோரிகிறார்கள்.

ஊடகவியலாளர்கள்இல்லையென் றால் தகவல் விநியோகம் ஸ்தம் பிதமடையும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆகவே ஊடகவியலாளர்களின்; நலன் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

தேசிய ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தில் இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற 50 பேருக்கான பணிக் கொடை கொடுப்பனவு இதுவரை கொடுக்கப்படவில்லை.

ஆகவே ஊடக சேவையை பலப்படுத்துவதாகபேச்சளவில்மாத்திரம் குறிப்பிட்டுக் கொண்டிருக்காமல் செயலளவில் செயற்படுத்துங்கள்.

அதேபோல் பெறுமதி சேர் வரி விதிப்பு பட்டியலுக்குள் நூல் பதிப்பு உள்ளவாங்கப்பட்டுள்ளது.தெற்காசிய வலயத்தில்எந்தநாட்டிலும்இவ்வாறான தன்மை கிடையாது. ஆகவே நூல் பதிப்பினை பெறுமதி சேர்(வற்) வரியில் இருந்து நீக்க வேண்டும். - என்றார். (05)

# சபாநாயகரால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது நளின், சஜித்துக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## சனத் நிஷாந்த கோரிக்கை



என்னை மாத்திரம் குற்றவாளியாக்கி சபாநாயகர் எனக்குதண்டனைவழங்கியதால் எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிரணியின் உறுப்பினர் நளின் பண்டார ஆகியோரின்செயற்பாடுகள்குறித்து சபாநாயகர் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தார்.

சனத் நிஷாந்த முன்வைத்த சிறப்புரிமை மீறலுக்கு எதிரணி யின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார் கள். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, 2023.11.21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்தால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து நான் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள் வதற்கு இரண்டு வாரங்கள் தடை விதிக்கப்பட்டன. அன்றைய தினம் இடம்பெற்ற சம்பவத்துக்குக் கவலை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சி தலைவரின் செயற்பாட்டை ஒட்டுமொத்த மக்களும் விமர்சிக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை அவர் தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதை மக்கள் அறிவார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நிலையியல் கட்டளைக்கு முரணாக செயற்ப ட்டார்.

அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் 27 இரண்டின் கீழ் உரையைஆரம்பித்தபோதுஐக்கிய மக்கள்சக்தியின்உறுப்பினர்நளின் பண்டார ஆளும் தரப்பினரை அவரது தொலைபேசி ஊடாக காணொளி பதிவு செய்தார். அதே போல் நளின் பண்டார எமது அனுமதி இல்லாமல் எம்மை காணொளி பதிவு போது அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். அதன்போது சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் காணொளி பதிவு செய்வதை தவிர்க்குமாறு அறிவித்தார். ஆனால் நளின் பண்டார அதனை பொருட்படுத்தாமல் தொடர்ந்து வீடியோ செய்துகொண்டிருந்தார்.

இந்தச் செயற்பாட்டால் அன்று சபையில் முறையற்ற செயற்பாடுகள் இடம்பெற்றன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்தச் சம்பவத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் ஆளும் தரப்பினரைஅச்சுறுத்தி,முறையற்ற வகையில் செயற்பட்டார்.

இந்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டசபாநாயகர்,என்னை மாத்திரம்குற்றவாளியாக்கிஎனக்கு தண்டனை வழங்கியதால் எனது நாடாளுமன்ற சிறப் புரிமை மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் செயற்பாடுகள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்என்பதை கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சி தலைவரின் செயற்பாடுகளால் எமது சிறப்புரிமை மீறப்படுகிறது. அவர் எமது நேரத்தையும் திருடுகிறார். ஆகவே காலத்தை வீணடிக்க வேண்டாம் என்பதை எதிர்க்கட்சித்தலைவரிடம் கேட்டுக் கொள்கிறேன். - என்றார்.

# களனிப் பல்கலைக் கழகம் மீண்டும் திறக்கப்படுகிறது

தற்காலிகமானக மூடப்பட்ட களனி பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

அதற்கமைய, பல்கலைக் கழகத்தின் மூன்று பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் திங்கட்கிழமை (11) முதல் மீள ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடம், விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் எனபன திங்கட் கிழமை திறக்கப்படவுள்ளன. மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பீடம் டிசெம்பர் 18 ஆம் திகதி திறக்கப்பட உள்ளது.

பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்ட மையால் கடந்த திங்கட்கிழமை களனிப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன. அதன்படி, அனைத்து மாணவர்களும் செவ்வாய்க்கிழமை (05) காலை 8.00 மணிக்கு முன்னர் அந்தந்த விடுதிகளை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# சீன உரக்கப்பல் தொடர்பில் விசாரணைக் குழு அமைப்பதற்குச் சபையில் எதிர்க்கட்சி எதிர்ப்பு

*கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் சீன கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட கழிவு உரம் தொடர்பாகவும் அதனை திருப்பி அனுப்பியதன் பின்னர் அதற்காக 6.7 மில்லியன் டொலர் செலுத்தியமை தொடர்பாக விசாரணை நடத்தி, அதற்கு சம்பந்தமானவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்காக குழு நியமிப்பது தொடர்பாக சபையில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் சபையில் வாக்குவாதம் ஏற்பட்டது.*

*நாடாளுமன்றத்தில்வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தின்போது தயாசிறி ஜயசேகர கழிவு உரக்கப்பல் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு வாக்குவாதம் ஏற்பட்டது.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனித உரிமைகள் தினம்

இன்று உலக மனித உரிமைகள் தினம். ஈழத் தமிழர்கள் வாழ்வில் கடந்த 10 ஆண்டுகளில் அதிகளவில் பேசப்பட்ட வார்த்தை இது. போருக்குப் பின்னரான காலத்தில் தீர்வு நோக்கிய முயற்சியில் தமிழர்கள் அதிகம் நம்பியிருந்த வார்த்தையும் இதுதான். உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிவகையாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையை தமிழர்கள் பெரிதும் நம்பியிருந்து ஏமாந்துபோன வரலாறே இந்தப் பத்தாண்டுகளில் எஞ்சியுள்ளது. குறைந்தபட்சம் நிலைமாறு கால நீதியையாவது இந்த மனித உரிமைகள் விடயத்தைக் கொண்டு ஒப்பேற்றிவிட முடியும் என்கிற எதிர்பார்ப்புக்கூடத் தோற்றுவிட்ட நிலையே காணப்படுகின்றது.

மனிதர்கள் மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான விட்டுக் கொடுக்க முடியாத மறுக்க முடியாத உரிமைகளை மனித உரிமைகள் என்று அழைக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்வதுடன் பிறரையும் வாழவிட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக மார்கழி 10 மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்துவதே இதன் நோக்கம். உலகில் வாழும் அனைத்து மனிதர்களும் சமமானவர்களே. ஒருவரிடமிருந்து நாம் எவ்வித உரிமையை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமையை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும். யாரும் யாரையும் அடிமைப்படுத்தக் கூடாது.

மானிடக்குடும்பத்தினரின் உள்ளார்ந்த கௌரவத்தையும்பி அவர்களின் சமமான பிரிக்க முடியாத உரிமைகளையும் அறிந்துஏற்பதே உலகில் சுதந்திரம் நீதி மற்றும் சமாதானத்தின் அடித்தளம் ஆகும் என சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரை எடுத்துக் கூறுகிறது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பிளேட்டோ அரிஸ்டோட்டில் போன்றோர் இயற்கைச் சட்டம் பற்றிய கோட்பாடுகளையும் பின்னர் கொன்பூசியஸ் (ஸீலிஜகூஷ்ற்உஷ்ற்வி) தனிநபர் கௌரவம் பற்றியும், எல்லா மக்களுக்கும் உரிய கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் பற்றியும் கூறியுள்ளனர். பின்னர் அரசியல் ஞானியான ஜோன் லொக் ((மூலிஜுஜ ஸிலிஉவள 1680) அவர்கள் மனிதன் இயற்கையாகவே சுதந்திரத்துடனும் சமத்துவத்துடனும் பிறந்தவன் எனவே சட்டமானது அவனின் உயிருக்கும் உடைமைக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

சுதந்திரமாக பிறந்த மனிதன் அடிமையாக வாழாது சுதந்திரமாகவே வாழ வேண்டும் என்று பிரான்ஸ் நாட்டின் அறிஞர் ரூசோ கூறினார்.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது நடந்த சொத்து இழப்பு படுகொலைகள் அட்டூழியங்கள் மற்றும் மனிதப் பேரழிவுகளின் பின்னர் தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டதே மனித உரிமைப் பிரகடனம்.

மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல அதுபோல் மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதும் அல்ல. எனவே ஒருவரின் உரிமையை பறிக்க எவருக்கும் உரிமையில்லை.

1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவான அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழு உதயமானது. 53 நாடுகளை அங்கமாக கொண்ட இக்குழு முதல் வேலையாக சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்குவதற்கு அன்றைய அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

இக்குழுவின் சிபாரிசின் படி 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

மார்கழி 10, 1948 பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் இந்தப் பிரகடனத்திற்கு 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கின. மார்கழி 10 என்ற இதே நாளை 1950ம் ஆண்டிலிருந்து சர்வதேச மனித உரிமைகள் தினமாக அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையைத்தான் இந்த நாளில் உலகம் உரத்து கூற வேண்டியுள்ளது. ஆனால் இந்த உலகம் அப்படி இல்லை என்பதுதான் கவலைக்குரியது. எண்ணிக்கையிலோ ஆயுதங்களிலோ பொருளாதாரத்திலோ வலியவர்களுக்கே மனித உரிமைகள் சொந்தம் என்கிற நிலைதான் பல நாடுகளிலும் உள்ளது. இலங்கையிலும் அதுவே நிலை. இந்த நிலை மாற்றம் அடையாமல் இந்த நாடு முன்னேற்றத்தை அடைவது சவாலானதே.

# மனித உரிமைகள் எனும் மகத்துவம்

பாலமுருகன்

நமக்கான அடிப்படை உரிமைகளைச் சட்டம் நமக்கு வழங்கியுள்ளதாகவே கருதிக் கொள்கிறோம். உண்மையில், நமது அரசமைப்புச் சட்டமானது நமக்கு அடிப்படையாக உள்ளவையாகவே



உரிமைகளை அங்கீகரித்துள்ளது. ஏனெனில், உரிமைகளை எவரும் யாருக்கும் வழங்க முடியாது. நமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்திலிருந்து உள்வாங்கப்பட்டவை. இந்த உலகில் வரலாறு முழுவதும் அநீதிக்கு, பாகுபாட்டுக்கு எதிராக நடத்தப்பட்ட இடைவிடாத போராட்டத்தால் உரிமைகள் நிலைபெற்றுள்ளன. உலகம் மீண்டும் மீண்டும் உரிமைகள் சார்ந்து மாற்றத்துக்கு உள்ளாகிறது.

மனித உரிமைப் பிரகடனத்தின் 30 உரிமைகள், எளியவர்கள், நாதியற்ற மனிதர்கள், அகதிகள் என அனைத்து விளிம்புநிலை மனிதர்களுக்குமான சம உரிமையை விளம்புகின்றன. சித்ரவதையிலிருந்து விடுதலை, தனி மனிதச் சுதந்திரம், உயிர் வாழும் உரிமை, கருத்துரிமை, கல்வி கற்கும் உரிமை, அரசியல் உரிமை, குடும்பமாக மாறும் உரிமை என உரிமையின் பல பரிமாணங்களை இப்பிரகடனம் உறுதிசெய்கிறது. இதன் உள்ளடக்கம், 'சுதந்திரம் மனிதர்களுக்கானது. அதை எவரும், எப்போதும், எதன் பொருட்டும் பறிக்க முடியாது. உலகின் எல்லா மனிதர்களும் சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனுமே பிறக்கிறார்கள்' என்கிறது.

**விசாலமான பார்வை:** இரண்டாம் உலகப் போரில் பொது மக்கள், போர் வீரர்கள் எனக் கோடிக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். உலகச் சமூகத்துக்கு நிகழ்ந்த அந்தப் பெரும் அழிவுக்குப் பின்னர் உலகில் மனிதப் படுகொலைகள், சக மனிதனைக் கண்ணியமின்றி நடத்தும் அவலங்கள், பாகுபாடுகள், அநீதிகள் போன்றவற்றைத் தடுக்க 'உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம்' (Universal Declaration of Human Rights), 1948 டிசெம்பர் 10 அன்று ஐ.நா. அவையில் அறிவிக்கப்பட்டது. அனைத்து மக்களுக்கும் சமத்துவம், கண்ணியம், சுதந்திரம் என்ற கோட்பாடுகளின் வெளிப்பாடாய் அந்த மனித உரிமைப் பிரகடனம் இருந்தது. அதை உருவாக்கியதில் இந்தியர்களின் பங்களிப்பும் முக்கியமானது. இன்று இந்தியா மனித உரிமைகளின் பக்கம் முற்றுமுழுதாக இல்லை, அதனைத் தனது அரசியல் நலன்களுக்கு ஏற்பப் பயன்படுத்துகின்றது என்றாலும், அன்று ஐ.நா. குழுவில் இந்தியாவின் சார்பில் இருந்தவர்களான ஹன்சா மேத்தா, எம்.ஆர்.மாசனி, லட்சுமி மேனன் ஆகியோர் அதில் மேற்கொள்ளப்பட்ட பல முக்கிய திருத்தங்களுக்குக் காரணமாக இருந்தனர். இவர்களில், ஹன்சா மேத்தா இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வரைவுக் குழுவில் இருந்த 15 பெண் உறுப்பினர்களில் ஒருவர்.

ஐ.நா. சாசனத்தில் மக்களைக் குறிக்க 'ஆண்' (man) என்ற சொல் இருந்தபோது இந்தியாவின் சார்பில் அதை 'மனிதர்கள்' (human beings) எனப் பொதுச் சொல்லாக மாற்றினர். பாகுபாடு என்ற இடத்தில் 'நிறத்தாலோ அல்லது அரசியல் வேறுபாட்டாலோ' என மாற்றம் கொண்டுவரப்பட்டது. பணிசெய்யும் உரிமை என்ற இடத்தில் அந்தப் பணி, 'நியாயமான, சாதகமான பணிச் சூழல் கொண்டதாக' என அவர்கள் திருத்தினர். மேலும் மதச்சார்பின்மை, பலகலாசாரத்தை ஏற்பது, உலக மனிதர்களாக நிற்பது போன்றவை மனித உரிமைகளின் அங்கம் என்பனவற்றையும் சேர்த்தனர்.

இவ்வரைவுக் குழுவில் இருந்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜப்ருல்லா கான், 'விரும்பிய மதத்தைத் தேர்வு செய்கின்ற அல்லது மதத்தை நிராகரிக்கின்ற உரிமை, குரானில் சுட்டிக்காட்டப்பட்ட மனிதர்களின் மதச் சுதந்திர உரிமை ஆகும். இந்தச் சாசனத்தில் அது இணைக்கப்பட வேண்டும்' என்றார். சவுதி அரேபியா இதைக் கடுமையாக எதிர்த்தது; மதம் மாறும் உரிமையை இந்த சாசனத்தில் குறிப்பிடத் தேவையில்லை என்றது. ஆனால், மற்றொரு இந்தியப் பிரதிநிதியான முகமது ஹபீப், மத வழிபாட்டு உரிமை என்பது விரும்பிய மதத்தைத் தேர்வு செய்யும் உரிமையையும் உள்ளடக்கியது என அக்கருத்தை ஆதரித்தார். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்கு அத்தகைய சுதந்திரம் உள்ளது என்றார். இதையடுத்து இந்த மத உரிமை சாசனத்தில் இணைக்கப்பட்டது. இப்படியான விசாலப் பார்வையாலும் உரிமைக் கரங்களாலும் அன்று மனித உரிமைகளை வலுப்படுத்துவதில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கியது. ஆனால், பிற்காலத்தில் அதற்கு மதிப்பளிக்காத நிலையை அந்த நாட்டு ஆளும் தரப்புக்களே ஏற்படுத்திக்கொண்டன.

உருவாக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் 75ஆம் ஆண்டு இன்று அனுசரிக்கப்படுகிறது.

**பரப்பப்படும் வெறுப்பு:** மனிதர்களின் உள்ளத்தில் படிந்துள்ள சமத்துவத்துக்கு எதிரான சிந்தனைகள், மனித உரிமையை மறுதலிக்கின்றன. சாதியம், மதவாதம் ஆகியவை, 'மனிதர்கள் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் பிறக்கிறார்கள்' என்ற உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் முதல் வாசகத்துக்கே எதிராக நிற்கின்றன. அடிமை நிலை, உரிமைகளை நசுக்குவது, சக மனிதனை வெறுப்பது என மனித உரிமைகளுக்கு அச்சிந்தனைகள் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. உலகில் மனிதர்களைக் கொத்துக்கொத்தாய்க் கொன்ற எல்லா பாசிசத் தத்துவங்களும் முதலில் வெறுப்பு என்ற புள்ளியிலிருந்து தொடங்கியவை; அவை மானுடப் பரப்பின் மகத்துவத்தை உணர்வதைத் தடுப்பவை.

நாம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயரிய நோக்கம் கொண்ட அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டவர்கள். ஆனால், அதை உணர்வுபூர்வமாக உள்வாங்க வேண்டியது மிகவும் அவசியம். மனித உரிமைப் பிரகடனத்தின் உரிமைகள் மக்கள் சமூகத்துக்கானவை. சக மனிதனைக் கண்ணியத்துடன் நடத்தும் மனித உரிமைப் பண்பாட்டினை வலியுறுத்துபவை. ஆனால், இப்போதும் உலகின் ஒரு பகுதியில் குழந்தைகள் மீதும், குடியிருப்புகள் மீதும் குண்டுகள் வீசப்படுகின்றன. அக்டோபர் 7 முதல் நவம்பர் 2 வரை, 25,000 தொன் வெடிகுண்டுகளைக் காசா பகுதியில் இஸ்ரேல் வீசியுள்ளது. இது இரண்டாம் உலகப் போரின்போது, 1945 ஆகஸ்ட் 6 அன்று ஜப்பானின் ஹிரோஷிமா மீது வீசப்பட்ட 'லிட்டில்பாய்' என்ற அணுகுண்டைக் காட்டிலும் அதிகம். அமெரிக்கா வீசிய அந்த அணுகுண்டு, 15,000 தொன் எடை மட்டுமே கொண்டது.

**வலிமை பெறும் உரிமைத் தத்துவம்:** ஐ.நா. அவையின் அதிகாரம் மிக்க பாதுகாப்பு அவையில், போரை நிறுத்த நடக்கும் இஸ்ரேலுக்கு எதிரான முயற்சிகளை அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரம் மூலம் தடுக்கிறது. அதிகாரம் மிக்க நாடுகள் தங்கள் அதிகாரத்தை நிறுவும் மையமாக ஐ.நா. அவையை மாற்ற முயல்கின்றன. வெறும் நாடுகளின் கூட்டமைப்பு என உலக அரசியல் தலைமைகளின் மையமாக ஐ.நா. சுருக்கப்படுகிறது. உண்மையில் உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம் அந்த அவையை மானுடத்தின் உரிமையைப்




பாதுகாக்கும் இடமாக இன்றும் நம்பிக்கை வெளிச்சத்தைப் பரப்புகிறது. காசா போர் போல அதிகாரம் மிக்க நாடுகளின் நேரடி/மறைமுக உதவியுடன் பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் கொன்றொழிப்பது நடக்கிறது.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் பலமுறை வேண்டுகோள் வைத்தும் இந்த மனிதப் பேரழிவு தடுக்கப்படவில்லை. இத்தனைக்கும் இந்தப் போருக்கு எதிராக உலகின் பல்வேறு பகுதிகளில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். தங்களின் ஆட்சியாளர்களுக்கு எதிராக அவர்கள் ஒவ்வொருவரும், உலக மனிதர்களில் ஒருவராய் நின்று தங்கள் குரலை உயர்த்தி அக்கொடுமையைக் கண்டித்துள்ளனர். மனித உரிமை என்ற தத்துவம் இன்னமும் வலிமை பெற்றுள்ளது. மனித உரிமைப் பிரகடனம் என்பது விடுதலையை உணர்பவர்கள், சுதந்திர வாழ்க்கையை நோக்கித் தங்களையும் தங்கள் சமூகத்தையும் நகர்த்துபவர்கள், உரிமைகளுக்கான கோரிக்கைகளை விடாது எழுப்புபவர்கள் எனத் தொடர் சமூகச் செயல்பாட்டால் மட்டுமே உயிர்ப்புடன் இருக்கும். ஆம்! நாம் அனைவரும் மனித உரிமைகளின் பிரிக்க முடியாத அங்கமே.

காலைக்கதிர் Kalaikkathir

# 2,500 ரூபா விவகாரத்தால் என் வீடு தீக்கிரையானது

## ஊடகத்துறை அமைச்சர் விசனம்



ஒருமாத செலவுக்கு 2,500 ரூபா போதும் என்று நான் ஒருபோதும் குறிப்பிடவில்லை. சொல்லாத விடயத்துக்காகவே என் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. ஊடகங்களால் நான் அதிகளில் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளேன் என ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் வெகுஜன ஊடகம் மற்றும் துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

கடந்த ஆண்டு போராட்டத்தின் போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன, 'இவர் 2,500 ரூபாவால் வாழ முடியும் என்று குறிப்பிட்டவர். ஆகவே இவரின் வீட்டுக்கு தீ வைக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுக்கொண்டு போராட்டகாரர்கள் எனது வீட்டுக்குத் தீ வைத்தார்கள்.

ஊடகங்களால் நான் விமர்சிக்கப்பட்டு நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டேன். ஒரு மாத செலவுக்கு 2,500 ரூபா போதும் என்று நான் ஒருபோதும் குறிப்பிடட்டவன் அல்லன்.

அவ்வாறு நான் குறிப்பிட்டதாக ஊடகங்கள் திரிபுபடுத்தி குறிப்பிட்டு என் மீது வெறுப்பைத் தோற்றுவித்தன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் நான் கல்வி அமைச்சராக பதவி வகித்தேன். அப்போது கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கான மாத கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை ஆராய்ந்து நான் அமைச்சரவைக்கு யோசனை ஒன்றை முன்வைத்து கொடுப்பனவு அதிகரிக்கவேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன்.

இதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு முதல் ஜனவரி மாதம் முதல் கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத கொடுப்பனவை 500 ரூபாவால் அதிகரித்து 3,000 ரூபா கொடுப்பனவை வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் ஒருமாத செலவுக்கு 2,500 போதும் என்று நான் குறிப்பிட்டதாக வதந்தி பரப்பி விடப்பட்டது.

இதனால் என்மீது பாரிய வெறுப்புக்கள் மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றன. இவ்வாறான நிலை ஊடக நெறி கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமானது. - என்றார்.

(05)மி

# கனடாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 10 கோடி ரூபா போதைப்பொருள் மீட்பு

பயணப் பொதி ஒன்றிலிருந்து 10 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் தொகையை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் வெள்ளிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தொகை கனடாவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேலதிக விடயம் தொடர்பில் மேல்மாகாண புலனாய்வுபிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து இந்த போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளன.

விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில், குறித்த போதைப்பொருள் தொகை கனடாவிலிருந்து டுபாய்க்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து கடந்த 14 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி வந்த யு.எல். 226 என்ற ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் குறித்து போதைப்பொருள் அடங்கிய பயணப் பொதி கொண்டுவரப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதுடன், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# இஸ்ரேலுடன் இருக்கும் தூதரக தொடர்புகளை நிறுத்தவேண்டும்

## இலங்கை - பாலஸ்தீன நட்புறவு சங்கத்தில் தீர்மானம்

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து கோரிக்கைகளையும் இஸ்ரேல் நிறைவேற்றும் வரை தற்காலிகமாக இஸ்ரேலுடன் இருக்கும் தூதரகத் தொடர்புகளை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இலங்கை பலஸ்தீன் நட்புறவு சங்கத்தின் புதிய செயலாளராகத் தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

இலங்கை பலஸ்தீன் நட்புறவு சங்கம் வெள்ளிக்கிழமை கொழும்பில் கூடியது. கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரும் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து கோரிக்கைகளையும் இஸ்ரேல் நிறைவேற்றும் வரை தற்காலிகமாகவேனும் இஸ்ரேலுடனான தூதரகத் தொடர்புகளை நிறுத்தவேண்டும் என நாங்கள் ஒரு தீர்மானம் ஒன்றை மேற்கொண்டோம்.

இது கட்சி பேதமின்றி அனைவரும் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும். ஊடக அமைச்சுக்கு இது முக்கியமான தீர்மானமாகும். பலஸ்தீன் மக்களுடன் முழு நாடும் இருக்கிறது என்ற செய்தியை இதன் மூலம் வழங்கி இருக்கிறோம்.

அது தொடர்பில் இலங்கை பலஸ்தீன் நாடாளுமன்ற நற்புறவு சங்கம் என்றவகையில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். - என்றார். அத்துடன் இலங்கை பலஸ்தீன் நட்புறவு சங்கத்தின் புதிய செயலாளராக தெரிவாகிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தேசிய மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் சபையில் நன்றி தெரிவித்தனர்.

(05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chkine Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கை சேறு பூசும் முயற்சியே

## சஜித் பிரேமதாஸ வேதனை



எனக்கும் எனது மனைவிக்கும் சேறு பூசும் நோக்கில் மொட்டு கட்சி ஆதரவாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு அறிக்கையே சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

எனக்கும் எனது மனைவிக்கும் சேறு பூசும் வகையில் இந்த சபையில் அரச பொறியியல் கூட்டுத்தாபன உள்ளக கணக்காய்வு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அது தொடர்பில் ஆராந்து பார்த்தபோது அது அரச பொறியியல் கூட்டுத்தாபண உள்ளக கணக்காய்வு அதிகாரி என்.வி.டி.தம்மிக என்ற நபரால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை அதுவாகும்.

இந்த என்.வி.டி.தம்மிக்க என்ற நபர் 2020 பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்த வர்த்தக கைத்தொழில்கள் மற்றும் சேவைகளுக்கான முற்போக்கு சங்கத்தின் அதிகாரிகள் குழுவின் ஒரு குழு உறுப்பினர்.

பெப்ரவரி 18, 2020 அன்று,பொதுஜ பெரமுனதொழிற்சங்கத்தின்மற்றொரு கடிதத்தின் மூலம் இவரை செயற்படும் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு நியமிக்குமாறு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உப தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை என மொட்டுக் கட்சியிலுள்ள தொழிற் சங்க உறுப்பினர்களைப் பயன்படுத்தி தவறான அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது.

அதேநேரம் கணக்காய்வு பதவிக்கு நியமிக்கப்பட சம்பந்தப்பட்ட விடயத்தில் அடிப்படை பட்டமும் 12 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்என்றாலும்,அவர் இத்தகைய கணக்காய்வு பதவியை வகிக்க எந்த தகுதியும் இல்லாதவர்.

குறைந்தபட்சம் ஏஎரி தகுதி கூட இல்லாத நபர். அதனால் இவை அனைத்தும் போலியான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்.

அத்துடன் இந்த நபர் சுயவிருப்பின் மூலம் சேவையை விட்டு வெளியேறியவர்.அவ்வாறான நபரையே இந்தப் பதவிக்கு நியமித்துள்ளனர்.

சுயவிருப்பின் மூலம் சேவையை விட்டு வெளியேறியவரை மீண்டும் அந்த சேவையில் இணைத்துக்கொள்ள முடியாது. அது மாத்திரமல்லாது இவருக்கு பதவி உயர்வு கூட வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் பொறுப்பேற்ற ஆரம்பத்திலேயே மத்திய கலாசார நிதியத்தின்ஊடாக11பில்லியன்மோசடி முறைகேடுகள்இடம்பெற்றுள்ளனஎனத் தெரிவித்து இதனை ஆராய்வதற்காக குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த ஹரிகுப்த ரோஹணதீர எனும் நபர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணிகளில் ஒருவராவார், 2010 தேர்தலில் போட்டியிட்ட கூட்டணியின்வேட்பாளர்களில் ஒருவர்.

அத்துடன் ,அவர்கள் மேற்கொண்ட விசாரணை அறிக்கையில் உறுப்பினர்கள் யாரும் கையெழுத்திடவில்லை என்றாலும், இந்த அறிக்கை 2020 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் அரசியல் லாபம் பெற பயன்படுத்தினார்கள்.

இந்த அறிக்கை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர்,இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு போதிய காரணிகள் இல்லை என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் கோப் குழு, சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளை அழைத்து வந்து, புதிய குழுவை நியமித்தது,அந்த குழுவின் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. ஏனெனில் விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எவரும் குற்றவாளிகள் அல்லர் எனநிரூபிக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம். - என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கராப்பிட்டிய மண்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

காலி, கராப்பிட்டியவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள கட்டுமான பகுதியில் நேற்று மண் சரிவு ஏற்பட்டது. அதில் நான்கு தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.

சம்பவம் நடத்த சிறிது நேரத்தில் மண்ணில் புதையுண்டவர்களை மீட்கும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டது.

மண்ணில் புதையுண்ட நால்வரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## அரசியலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்துவம் இதன்போது வழங்கப்பட்டது. மேலும் பல வருடங்களாக கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு பங்களிப்புச் செய்த உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வாழ்நாள் அங்கத்துவம் அதன் தலைவர் நிஷாந்த ரணதுங்கவினால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்தின் 150 ஆவது ஆண்டு விழாவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் ஒரு அங்கமாக மாறியுள்ளது. இங்கிலாந்தில் கிரிக்கெட் தொடங்கிய காலத்திலிருந்தே, அணிகள் இணைந்து விளையாட்டுக் கழகங்களை உருவாக்கின. மாலுமிகள் வரும்போதும், அவர்களும் தற்காலிக கிரிக்கெட் அணியை உருவாக்கினர். மலாய் படைப்பிரிவின் படைமுகாமில் தங்கியிருந்த வீரர்கள் கோல்ட்ஸ் என்ற அவர்களின் கிரிக்கெட் அணியை உருவாக்கினர்.

ஒருமுறை கோல்ஸ் மற்றும் றோயல் கல்லூரி, புனித தோமஸ் மற்றும் வெஸ்லி கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் பின்னர், சிங்கள விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் மற்றொரு கழகத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. அதே நேரத்தில் தமிழ் யூனியன் உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக, இன அடிப்படையில் பல விளையாட்டுக் கழகங்கள் உருவாகின. இவை மலாய், பறங்கியர், சிங்களம், தமிழ் ஆகிய வார்த்தைகளால் மட்டுமே பெயரிடப்பட்டிருந்தாலும், அரசியல் கட்சிகளைப் போலல்லாமல் அனைத்து இன மக்களும் இதில் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான அரசியல் கட்சிகளில் இதனைக் கண்டுகொள்ள முடிவதில்லை. அதனால்தான் நாம் இன்று இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம். எவ்வாறாயினும், உங்களது பங்களிப்பு இலங்கையின் விளையாட்டு வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையின் கிரிக்கட் ஆரம்பத்தை எடுத்துக்கொண்டால், பிரித்தானியர்கள் சிலர் இன்றுள்ள விதிகள் எதுவுமின்றி வெறும் மட்டையால் பந்து விளையாடிய காலத்திலிருந்து இன்று வரை கிரிக்கெட்டின் பரிணாமத்தை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். நாங்கள் டெஸ்ட் கிரிக்கெட்டைப் பார்த்திருக்கிறோம், அந்தக் காலத்தைக் கடந்திருக்கிறோம். இவ்வாறு நோக்கும்போது, கிரிக்கெட் வேகமாக மாறும் விளையாட்டு. நவீன தொழில்நுட்பத்துடன் தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக, விளையாட்டும் இப்போது மாறி வருகிறது.

இந்த ஆண்டு வரவுசெலவுத்திட்ட விவாதத்திலும் கிரிக்கெட் முக்கிய இடம் பிடித்திருப்பதை பார்த்தோம். இம்முறை வரவுசெலவுத்திட்ட விவாதம் முக்கியமாக கிரிக்கெட் தொடர்பிலேயே இடம்பெற்றது, வரவு செலவுத்திட்டம் பற்றி அல்ல, அதாவது அரசாங்கத்தையும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளையும் விமர்சிக்க எதிர்க்கட்சிகளுக்கு எதுவும் இருக்கவில்லை.

இதேவேளை, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருக்குப் பதிலாக புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். கிரிக்கெட்டின் முன்னைய நிலைமையை எவ்வாறு மீட்டெடுப்பது என்பது குறித்து அமைச்சர் தற்போது சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுடன் (ஐஊஊ) கலந்துரையாடி வருகிறார். அவை அனைத்தும் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு, எமக்கு மீண்டும் உலகத்துடன் செயற்பட கிடைக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப்போம்.

2030 இல் இலங்கையின் கிரிக்கெட் எங்கு இருக்க வேண்டும் என்ற இலக்கு எனக்கு உள்ளது. எனவேதான் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பாடசாலை மட்ட கிரிக்கெட் வளர்ச்சிக்காக 1.5 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கு மட்டுமன்றி இந்த இலக்கு நிறைவேறும் வரை இந்த நிதியை வழங்குவோம். இதனை வருடத்திற்கு 02 பில்லியன் வரை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நாட்டில் கிரிக்கெட்டை முகாமைத்துவம் செய்வதில் அதற்கு அரசாங்கம் அதிகம் தலையிடாமல் இருப்பதே எமது நோக்கமாகும். மேலும், எதிர்காலத்தில் கொண்டு வரப்படும் புதிய சட்டங்கள் மூலம் இடைக்கால குழுக்கள் மற்றும் அமைச்சரின் அதிகாரங்கள் நீக்கப்படும்.

இந்த நிதி நிர்வாகத்தையும் பாடசாலை கிரிக்கெட்டின் வளர்ச்சியையும் ஒரு சுயாதீன நிதியத்திற்கு நாம் ஒப்படைப்போம். மீதமுள்ள பகுதி நிர்வாக சபைக்கு உள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படும். விளையாட்டுத்துறையை மேம்படுத்த அமைச்சுக்கு அதிகாரம் உள்ளது. மைதானங்கள், உபகரணங்கள் என எதற்கு இந்த நிதி செலவிடபபட்டாலும் அது மூலதனச் செலவில் குறிப்பிடப்படும். எனவே, நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் உள்ள பாடசாலை கிரிக்கெட் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதே அதன் அர்த்தம். அதன் பின்னர் எமக்கு மாகாண மட்டத்தில் கிரிக்கெட்டை முன்னேற்ற முடியும்.

நாம் தொடர்ந்து கிரிக்கெட் வீரர்களை உருவாக்க வேண்டும். இந்த நிதியை கிரிக்கெட் வீரர்களை உருவாக்கவே நாம் பயன்படுத்துகிறோம். ஆண் பிள்ளைகள் மாத்திரமன்றி, பெண் பிள்ளைகளும் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். இதன் மூலம் நாட்டின் கிரிக்கெட் விளையாட்டை ஒரு குறிப்பிட்ட தரத்திற்கு கொண்டு வருவோம்.

மேல்மாகாணத்தில் கிரிக்கெட் பற்றிப் பேசும்போது கொழும்பில் உள்ள சில பாடசாலைகளைத் தவிர பாதுக்க, கிரிந்திவெல, அகலவத்தை போன்ற பகுதிகளில் கிரிக்கெட் எந்த வகையிலும் வளர்ச்சியடையவில்லை. எனவே அனைத்து பாடசாலைகளுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பு இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

கிரிக்கெட் ஒரு வளர்ந்து வரும் விளையாட்டு. எல்லா ஆட்டத்திலும் எங்களால் வெற்றி பெற முடியாது. ஆனால் அவற்றில் சிலவற்றை நம்மால் வெல்ல முடியும். எனவே இதற்காக பணத்தை செலவிட தயாராக உள்ளோம். அத்துடன், தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு வளாகத்தை விளையாட்டுப் பல்கலைக்கழகமாக அபிவிருத்தி செய்வதற்கும் நாங்கள் செயற்பட்டுவருகின்றோம். அதற்காக நாம் கிரிக்கெட் நிர்வாக சபையை இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

நாட்டில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், வளமான தேசமாக மாற்றவும் அவசியமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். பொருளாதாரத்தில் மட்டுமன்றி பாடசாலைகளில் கிரிக்கெட் போன்ற ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கும் நாடாக நாம் திகழ்வதை உறுதி செய்வோம். பொருளாதாரம் என்பது பணம். விளையாட்டு வணிகமயமாக்கப்பட்டால் நாமும் அதற்குள் நுழைவோம். மேலும், விளையாட்டை வணிகமயமாக்கினால், அதை அரசியல் தலையீடு இல்லாமல் பேணிக் கொள்வோம் என்றார்.

# யாழ். மாவட்டத்தில் வாள், நீளமான கத்திகள் தயாரிக்கும் இடங்களைத் தேடும் பொலிஸார்



யாழ்ப்பாணத்தில் வாள் மற்றும் நீளமான கத்திகளைத் தயாரிக்கும் இடங்களைத் தேடும் விசேட சுற்றிவளைப்புகள் தீவிரமாக நடத்தப்படும் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்த தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் கூலிக்கு வன்முறையில் ஈடுபடும் கும்பல்களுக்கு இடமளிக்க முடியாது என யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## மின்சார சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனும், மனிதவள பிரிவிடமும் 3 முறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இந்த மறுசீரமைப்பு தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மின்சாரத்துறை அமைச்சின் செயலாளர் மாபா பதிரன உட்பட குழுவின் உறுப்பினர்கள் கட்டணம் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் இந்த குழுவில் பணியாற்றினார்கள்.

மின்சார சபை மறுசீர மைப்பு சட்டமூலம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் ஒருசில குறைப்பாடுகள் காணப்படுகிறதை ஏற்றுக்கொள்கிறோம். தமிழ் மொழிப்பெயர்ப்பில் இரண்டு உறுப்புரைகள் நீக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஆகவே இந்த வர்த்தமானியில் முன்னெடுக்கப்பட வேண்டிய 42 திருத்தங்களை சட்ட திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ளோம். திருத்தங்களுடன் வர்த்தமானி மீண்டும் வெளியிடப்படும்.

பாராளுமன்ற கூட்டத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய தேவை எமக்கு இல்லை.

இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கடந்த 20 ஆண்டுகாலமாக குறிப்பிடப்பட்டது. கடந்த 14 மாதங்களாக பொறுப்புடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளை குழுவினர் முன்வைத்துள்ளார்கள். ஆகவே அவசரப்பட வேண்டிய தேவை இல்லை.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஜெய்கா நிறுவனம் ஆகிய சர்வதேச நிறுவனங்களிடம் தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளோம்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலம் எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் முதல் வாசிப்புக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படமாட்டாது. அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும். 225 உறுப்பினர்களும் இந்த சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தலாம்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான குழுவை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைக்குமாறு எதிரணியின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த குழுவை நானே நியமித்தேன். அமைச்சர் என்ற ரீதியில் நான் பொறுப்புக் கூற வேண்டும் ஆகவே என்னை சிறப்புரிமை குழுவுக்கு அழையுங்கள்.

மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. மின்சார சபை சட்டத்தை திருத்தம் செய்யாமல் மின்கட்டமைப்பில் எவ்வித முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் மின்கட்டணத்தை திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டிந்தது.

மழைவீழ்ச்சி அதிகளவில் கிடைத்துள்ளதால் அடுத்த மாதம் மின்கட்டணத்தை திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான ஆலோசனைகளை எதிரணியினர் எதிர்வரும் 12 ஆம் திகதி முன்வைக்க வேண்டும் என்றார்.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளார். அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் சம்பள உயர்வு அவசியம் எனவும் ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த முயற்சியை, யோசனையை நாம் வரவேற்கின்றோம். கூட்டு ஒப்பந்த முறைமை ஊடாக குறைந்தபட்ச நாட் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்குமாறும், அவ்வாறு இல்லையேல் மாற்று முன்மொழிவை டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் முன்வைக்குமாறும் ஜனாதிபதி பணிப்பு விடுத்துள்ளார்.

ஆயிரத்து 700, 2 ஆயிரம் என இலக்கங்களை மையப்படுத்திக்கொண்டிருக்காமல், நாட் சம்பள முறைமையில் இருந்து மாற வேண்டும். இந்த விடயத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். தற்போதைய சம்பள முன்மொழிவு என்பது தற்காலிக தீர்வாகவே அமையும். எமக்கு நிரந்தர தீர்வு அவசியம். எமது மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் கிடைக்கும் வகையிலான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

மாவட்டத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளோம். சிவில் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் பேச்சு நடத்தி வருகின்றோம். எமது அமைச்சின் ஊடாகவும் சம்பள பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. கூட்டு ஒப்பந்தம் அவசியம் என்பதை அதனை விமர்சித்த தரப்புகளே இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, அந்த முறைமை மீண்டும் வரும் - - என்றார்




## கலைஞர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபிக்கப்பட வேண்டும் என இங்கு பரிந்துரைக்கப்பட்டது.

கலைஞரின் தொழில் திறனைப் பாதுகாத்து இதனைத் தொழில்துறையாகப் பேணுவது குறித்து புதிய சட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும் என இங்கு கலந்துரையாடப்பட்டது. இவ்வாறான அரச தலையீடு இதுவரை இடம்பெறாதது பெரும் பிரச்சினை எனவும், அதனால் கலைஞர்கள் தாங்களாகவே ஒன்று திரண்டு பல்வேறு அமைப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கலைஞர்கள் சுட்டிக்காட்டினர். இதனை முக்கிய தேவையாகக் கருதி இவ்விடயத்தில் நீதி அமைச்சர் தலையிட்டிருப்பதற்கு கலைஞர்கள் நன்றி தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, கலைத்துறை தொடர்பான அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் புதிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கு தன்னாலான பங்களிப்பை வழங்குவதாகச் சுட்டிக்காட்டினார். அதற்கான அடிப்படைக் கட்டமைப்பை தயாரித்து ஜனவரி 10க்கு முன்னர் வழங்குமாறும் கலைச் சங்கங்களிடம் அவர் கோரிக்கை விடுத்தார். அத்துடன், அரசியல் கட்சி பேதமின்றி பேதமின்றி கலை மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கைக்கு அனைத்து தரப்பினரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

## ஷானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி ஷானி அபேசேகரவை வாகனம் மூலம் மோதி கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியது தொடர்பான தகவல் வந்திருப்பதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சமீபத்தில் நீதிமன்றில் தெரிவித்திருக்கின்றனர். இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

ஷானி அபேசேகரவுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. அதனால் அந்த அச்சுறுத்தலுக்கு ஏற்றவாறு முறையான பாதுகாப்பை அவருக்கு வழங்குவது எமது பொறுப்பாகும். அது எமது கடமையுமாகும். வாகனங்களால் மோதச் செய்து கொலை செய்தல், எரித்து கொலை செய்தல் போன்ற உதாரணங்கள் எமது நாட்டில் இருக்கின்றன.

அதனால் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றததுக்கு தெரிவித்த விடயங்களை அடிப்படையாக் கொண்டு ஷானி அபேசேகரவின் பாதுகாப்பு தொடர்பாக, கவனத்திற் கொண்டு முறையான பாதுகாப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச எம்பி. தெரிவிக்கையில், ஷானி அபேசேகர தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு தெரிவித்திருக்கும் விடயம் பாரதூரமானதாகும்.

பொலிஸ் அதிகாரி ஒருவரை அவ்வாறு கொல்ல முடியும் என்றால் எங்களையும் அவ்வாறு கொல்லத் திட்டமிட முடியும். அதனால் சட்டமா அதிபரை பாராளுமன்றத்துக்கு அழைத்து அதன் உண்மைத் தன்மை தொடர்பாக கேட்டறிந்து இந்தசபைக்குஅறிவிக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## புத்தளம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 27 மற்றும் 35 வயதுடைவர்கள். கல்பிட்டியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் தங்கம் மற்றும் படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# மாவீரர் நினைவேந்தலில் பங்குபற்றியோரிடம் வாக்குமூலம் பெறும் மட்டக்களப்பு பொலிஸார்

## நீதியமைச்சர் விஜயதாஸ அடித்துக் கூறுகிறார்

மட்டக்களப்பு தரவை மாவீர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தலில் பங்கேற்றியவர்களின் மோட்டர் சைக்கிள் இலக்கத்தை வைத்து பெயர் முகவரியை பெற்று ஊடகவியலாளர் உட்பட நான்கு பேரை வெள்ளிக்கிழமை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து பொலிஸார் நினைவேந்தலில் பங்கேற்றமை தொடர்பாக வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி கிரான் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற நினைவேந்தலில் பங்கேற்பதற்காக மோட்டர் சைக்கிளில் சென்று பங்கேற்றுவிட்டு வீடுதிரும்பியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை வாழைச்சேனை பொலிஸார் ஊடகவியலாளர் பிரதீபன் உட்பட 4 பேருக்கு கையடக்க தொலைபேசி ஊடாக மோட்டர் சைக்கிள் பிரச்சினை தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டனர்.

இதனையடுத்து சம்பவதினமான வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்துக்கு சென்று மோட்டர் சைக்கிள் பிரச்சினை தொடர்பாக போக்குவரத்து பொலிஸார் வருமாறு கோரிய நிலையில் இல்லை நாங்கள் அழைத்தது மாவீரர் நினைவேந்தலில் பங்கேற்றமை தொடர்பாக வாக்கு மூலங்களைப் பெறுவதற்காக வரவழைத்துள்ளதாகவும் தெரிவித்து வாக்குமூலங்களை பெற்றுள்ளனர்.

குறித்த நபர்கள் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்று அதனை நிறுத்திவிட்டு நினைவேந்தலில் பங்குபற்றிய நிலையில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டர் சைக்கிள்களின் இலக்கங்களைப் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் எழுதி எடுத்துக் கொண்டு அதனை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பி அந்த மோட்டர் சைக்கிளின் உரிமையாளரின் பெயர் முகவரியைப் பெற்று அதனைக் கொண்டு அவர்களைத் தொடர்புகொண்டு பொய்யான பிரச்சினைகளைத் தெரிவித்து பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்துள்ளனர்.

இவ்வாறு பொலிஸார் மாவீரர் நினைவேந்தல் முடிவுற்று இருவாரங்கள் சென்றபின்பும் தொடர்ச்சியாக நினைவேந்தலில் பங்கேற்றவர்களை பொய் தெரிவித்து வரவழைத்து அச்சுறுத்தி ஈடுபட்டுவருகின்ற இந்த செயற்பாட்டையடுத்து மக்கள் பீதியடைந்துள்ளனர்.(05)

# வருவார்கள், சந்திப்பார்கள், போவார்கள் ஆனால் எந்தத் தீர்வு கிடைக்கமாட்டாது

## உலக தமிழர் பேரவையினரிடம் ஆறு.திருமுருகன் வருத்தம்



தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. ஏனென்றால், சாதாரணமாக இந்துக்களின் பிரச்சினைக்குக் கூடத் தீர்வு கிடைக்காத நிலையில், தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும் என நம்ப முடியாத நிலை காணப்படுவதாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் நல்லை ஆதீனத்தின் செயலாளருமான கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

உலக தமிழர் பேரவையினர் நல்லை ஆதீன முதல்வரை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பேரவையினரை சந்தித்தபோது ஆறு.திருமுருகன் மேலும் கூறியவை வருமாறு -

இன்று நீங்கள் எல்லோருமாக இங்கே வந்திருக்கிறீர்கள். நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. உங்களைப் போல் பலர் இங்கே வருகை தந்து சந்திக்கிறார்கள். பின்பு போய்விடுவார்கள். ஆனால், எந்த முடிவோ எந்தத் தீர்வுமோ எட்டப்படுவதில்லை.

குறிப்பாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் கூட நீங்கள் இருக்கும் கதிரையில் இருந்து என்னிடம் பல பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். நாங்களும் பல விடயங்களைக் கூறினோம். அவ்வாறே போய்விட்டார். எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் திருப்பணி வேலைகளை செய்ய முடியாதுள்ளது. அங்கே பல இடர்பாடுகள் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோல காங்கேசன்துறை பகுதியை எடுத்துக்கொண்டால், எங்களுடைய சித்தர்கள் இருந்த இடங்கள், சமாதிகளை இடித்து, புராதன கோவில்களை இடித்து, ஜனாதிபதி மாளிகையைக் கட்டிவிட்டு, இன்று அந்த இடத்தை வேறு யாருக்கோ விற்க முற்படுகிறார்கள். இதெல்லாம் பிழையான விடயம் தானே. ஏனென்றால், முதலில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்போதுதான் எமக்கு ஒரு நம்பிக்கை வரும்.

தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவீர்கள் என்று இந்த விடயத்தை உடனடியாகக் கருத்தில் எடுத்து, இதனை செயல்படுத்த நீங்கள் முன்வாருங்கள் பார்ப்போம்.

அதேபோல இந்தப் பிரச்சினை தொடர்பில் அஸ்திரிய பீடத்தினர் கூட இங்கே வருகை தந்து ஆதீனத்தை சந்தித்தபோது பல விடயங்களை எடுத்துரைத்தோம். ஆனால், அவை காற்றில் போய்விட்டன. அதேபோல நீங்களும் போகக்கூடாது. நீங்களும் இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (05)

# மத்ரஸா மாணவன் கொலை; மௌலவியின் மறியல் நீடிப்பு

மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 21 திகதி வரை வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு வெள்ளிக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸாரின் நீண்ட சமர்ப்பணங்கள் உட்பட ஏனைய விடயங்களை ஆராய்ந்த நீதிவான் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சுமார் 4 மணித்தியாலங்கள் வாக்குமூலங்களை வழங்கிய மௌலவி இறுதியாக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் அழைத்து செல்லப்பட்டார். அங்கு உடற்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்

சந்தேக நபராக மௌலவியின் சார்பாக எந்தவொரு சட்டத்தரணிகளும் முன்னிலையாகவில்லை. சந்தேக நபரான மௌவியின் வாக்குமூலங்களை பெற்ற பொலிஸார் சிசிடிவி கமராக்களை பொருத்தியவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அட்டாளைச்சேனையில் மறைந்திருந்த சிசிடிவி கமரா பொருத்திய நபர் மற்றும் அவரது உதவியாளர்கள் 3 பேரை பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது தனித்தனியாக அவர்கள் ஒவ்வொருவரிடமும் வாக்குமூலங்களை பெற்ற பொலிஸார் காணாமல் சென்ற முக்கிய ஆதாரங்களை அழிக்கப்பட்ட நிலையில் வன்பொருள் சேமிப்பகத்தை கைப்பற்றி நீதிமன்ற சான்று பொருளாக மன்றில் ஒப்படைத்ததுடன் அரச பகுப்பாய்விற்காக அழிக்கப்பட்ட காணொளிகளை மீளவும் பெற்றுக்கொள்வதற்கு மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(05)

# 6 தடவைகள் பிரபாகரனைச் சந்திக்க முயன்றபோதும் கைகூடவில்லையென மல்வத்து மகாநாயக்கர் வருத்தம்

## உலகத் தமிழர் பேரவையின் தலைவர் தெரிவிப்பு



போர்க் காலத்தில் மல்வத்து மகாநாயக்க தேரர் ஆறு தடவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்க முயன்றார் எனவும் ஆனால், அந்த விடயம் கைகூடவில்லை என தம்மிடம் தெரிவித்தார் எனவும் உலக தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை வழிபட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு வருகை தந்து பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். அதேபோல மும்மத தலைவர்கள், மகாநாயக்க தேரர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

கிறிஸ்தவ தலைவர்களையும் சந்தித்திருந்தோம். அவர்களை சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும்; நடந்த போர்க்குற்றங்கள் போன்றவற்றுக்கு பொறுப்புக் கூறல் ஒரு முக்கியமான விடயம்; வெளிநாடுகளின் பிரேரணைகளை நிறைவேற்ற வேண்டியதும் முக்கியமான விடயம் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பிரகடனம் ஒன்றை நாங்கள் ஜனாதிபதி மற்றும் ஏனையோரிடம் கையளித்திருக்கிறோம்.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மதகுருமார்களுடன் ஒன்று சேர்ந்து 25 மாவட்டங்களுக்குச் சென்று இந்த பிரச்சினைளுக்கு ஒரு தீர்வை, ஒன்றிணைந்து மக்களாக கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்களது அடிப்படை நோக்கம்.

நாங்கள் அரசியல்வாதிகளைச் சந்திப்பதன் நோக்கம், இப்படியான வேலைத்திட்டத்தை நாங்கள் செய்கின்றோம் என்பதை அரசியல்வாதிகளுக்கு வெளிப்படையாகக் கூறுவதற்காகவே ஆகும். இதை குறை கூறக்கூடாது அல்லது குறை கூறும் அமைப்பாக எங்களைப் பார்க்கக் கூடாது.

குறிப்பாக, அரசாங்கத்தின் வேலைத்திட்டம் அல்லது பௌத்தர்களின் வேலைத்திட்டம் என்று குறை கூறக் கூடாது என்பதற்காக நாங்கள் அரசியல்வாதிகளுக்கும் திட்டத்தைத் தெளிவாக கூறி, இதை மக்கள்மயப்படுத்துவதே எமது நோக்கம். மக்களே தீர்ப்பு கூற வேண்டும் என்பது எமது நோக்கம்.

அரசியல்வாதிகள் குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளையும் அதாவது கோட்டா தவிர ஏனையோரை சந்திக்கவுள்ளோம்.


பலதரப்பட்ட சமூகத்தினரை சந்தித்து வேலைத்திட்டத்தினை மக்கள்மயப்படுத்தி, மக்கள் மத்தியில் வருகின்ற தீர்வுகள்தான் நிரந்தரமானதாக இருக்கும் என்றே நாங்கள் சிந்திக்கின்றோம்.

அஸ்கிரிய பீடத்தை நாங்கள் சந்தித்தபோது மகாநாயக்க தேரர் -

'சகோதரத்துவம், சமதர்மம், சமாதானம் என்ற அடிப்படையில் வேலை செய்தால் இலங்கை என்ற நாட்டில் பிரச்சினைகள் இருக்காது. அப்படி அரசியல்வாதிகள் செய்வதில்லை. நீங்கள் இப்படி மக்களிடம் செல்லப் போவதை நான் வரவேற்கிறேன். இதற்கு நான் நிச்சயமாக உறுதுணையாக இருப்பேன். அதனை நான் வெளிப்படையாகவே கூறி, ஆதரவு தருகிறேன்' என்று கூறினார்.

அதேபோல மல்வத்து மகாநாயக்க தேரர், தான் போர்க்காலத்தில் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்காக ஆறு தடவை அப்போதைய அரசாங்கங்களைக் கேட்டதாகவும், அதற்கு அரசாங்கம் விடாதிருந்தபோது, ஆறாவது தடவையாக பிரபாகரனைக் காண வேண்டும் என்று வவுனியா வரை தான் வந்ததாகவும், ஆனால் அது கைகூடவில்லை எனவும், போர்க்காலத்தில் கூட ஒரு தீர்வைக் கொண்டு வர வேண்டும். சமாதானத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற விடயத்தில் தாங்கள் ஈடுபட்டதாகவும், இப்படி மக்கள் மயமாகி அரசியல்வாதிகளைத் தவிர்த்து மக்கள் மூலமாக ஒரு தீர்வு வருவதற்கான நோக்கம், ஒரு நல்ல நோக்கம் தான். அதை தான் ஆதரிப்பதாகவும் வாழ்த்து தெரிவிப்பதாகவும் கூறி எங்களை வழியனுப்பினார் என்று குறிப்பிட்டார். (05)

# உலகத் தமிழர் பேரவையினர் நேற்று நல்லூர் கந்தன் ஆலயத்தில் வழிபாடு



உலக தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்தனர்.

இதன்போது மதத்தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லை ஆதீனம், யாழ். ஆயர் இல்லம் என பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மிருகக்காட்சிச்சாலை ஒட்டகச்சிவிங்கி கொல்லப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு

தெஹிவளையிலுள்ள தேசிய மிருகக் காட்சிசாலையில் உயிரிழந்த ஒட்டகச்சிவிங்கி கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய விலங்கியல் பூங்கா ஊழியர் சங்கத்தின் தலைவர் கிரிஷாந்த கிறிஸ்டோபர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவில் பெண் ஒட்டகச்சிவிங்கி ஒன்று உயிரிழந்தது.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கிரிஷாந்த கிறிஸ்டோபர் -

ஒட்டகச்சிவிங்கி அருகி வரும் உயிரினமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள ஒட்டகச்சிவிங்கிகள் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் விசேட கவனத்தைப் பெற்றுள்ளதோடு, இது அவற்றின் பாதுகாப்பு பற்றிய கவனத்தை ஈர்க்கிறது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒட்டகச்சிவிங்கியின் உயிரிழப்பு இயற்கையானதல்ல; கொல்லப்பட்டுள்ளது என்றார். ஒட்டகச்சிவிங்கியின் உயிரிழப்பு தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள மிருகங்களின் பாதுகாப்பின் பின்னடைவைக் காட்டுகிறது.

மிருகங்களின் நலனைப் பாதுகாப்பதற்காக தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் இருந்து தகுதியற்ற கால்நடை வைத்தியர் ஒருவரை அகற்றுமாறு வலியுறுத்தி தொழிற்சங்கம் அமைச்சுக்கு பல முறைப்பாடுகளை செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (05)

# யாழ். கொடிகாமத்தில் நகைகள் கொள்ளை

## மூவர் கைது

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் இளைஞனை தாக்கி அவரது வீடு புகுந்து சேதப்படுத்தி நகை பணங்களை கொள்ளையிட்டு சென்ற சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் விசாரணைகளுக்கு பின்னர் சனிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி பகுதியில் கடந்த புதன்கிழமை வீதியால் சென்ற இளைஞன் மீது வன்முறைக் குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன், குறித்த இளைஞனின் வீட்டிற்குச் சென்று பெறுமதியான உடைமைகளை அடித்து நொருக்கியதுடன் வீட்டில் இருந்த நகை, பணம் போன்ற பெறுமதியான பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றனர். காயப்பட்ட இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2023இல் வெளியிடப்பெற்றது.